JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 50 |
| NAME | : | முருகேசன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 23.09.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது மைலப்பபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் செங்கல் மாலில் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளிடம் நான் சீட்டு போட்டிருந்தேன். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியும். அசா.2 அந்தோணிராஜ் தெரியாது. அசா.3 டேவிட் அமல்ராஜ் தெரியும். அசா.4 செல்வராஜ் தெரியாது, அசா.5 ஜோசப்ராஜ் தெரியும், அசா.6 அருமைகிளி தெரியாது. அசா.7 பாலமுருகன் தெரியாது. அசா,8 செல்வராணி தெரியாது அசா.9 பூங்கொடி சூசை தெரியாது, அசா.10 சீதாலெட்சுமி தெரியாது, அசா.11 ராமலெட்சுமி தெரியாது, அசா.12 பொன்பாண்டி தெரியும், அசா.13 சாந்தி தெரியும், அசா.14 குணசீலன் தெரியாது, அசா.15 முத்துலெட்சுமி தெரியாது, அசா.16 செல்வகுமாரி ஆகியோர்களை தெரியாது அசா.17 முருகன் அசா.18 ராமர் மனைவி சரோஜா ஆகியோர்களை தெரியாது அசா.19 குமரேசன் தெரியும் அசா.20 மணிராஜ் தெரியும், அசா.21 பொன் சேகர் தெரியாது . அசா.22 சுதா தெரியாது, அசா.23 ரவிகுமார் தெரியும், அசா.24 ஜெயஜோதி தெரியாது, அசா.25 ஜானகி ஆகியோரை தெரியாது. அசா.26 பவளக்கொடி தெரியாது, அசா.27 தெய்வகனி தெரியாது, அசா.28 செல்வன் தெரியாது, அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் தெரியும். அசா.30 அருள்ஜெலஸ்டீன் தெரியாது, அசா.31 அன்னபூரணி தெரியாது, அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் தெரியாது, அசா.33 முத்துக்கனியை தெரியும், அசா.34 வசுமதி தெரியாது, அசா.35 இருளப்பன் தெரியாது, அசா.36 முருகன் தெரியாது, அசா.37 கெலின் ஞானபிரகாசம் தெரியாது, அசா.38 மரியசுந்தரி ஆகியோர்களை தெரியாது அசா.39 தேன் மொழி அசா.40 புஷ்பவள்ளி அசா.41 விஜய், அசா.42 சரோஜா ஆகியோரை தெரியாது. அசா.43 பாலமுருகன் அசா.44 காளீஸ்வரி ஆகியோர்களை தெரியாது. அசா.45 கனகமணி, அசா.46 சகுந்தலா

தெரியாது, அசா.47 ஞானப்பிரகாசம் தெரியும்,. அ.சா.48 சேர்மக்கனியை தெரியாது, அ.சா.49 மூக்கம்மாள் தெரியாது, ஆஜர் எதிரிகள் 2014ம் வருடத்திலிருந்து சீட்டு பிடித்தார்கள். நான் 2016ம் வருடத்தில் ஆஜர் எதிரிகளிடம் சீட்டு போட்டிருந்தேன். 7 குழுக்களாக சீட்டு பிரித்தார்கள். நான் 61,000/—ம் சீட்டில் 5 சீட்டு சேர்ந்திருந்தேன். நான் 36,000/—ம் சில்லறை சீட்டு பணம் கட்டியுள்ளேன். நான் சீட்டு பணத்தை ஞாயிற்றுக்கிழமை தோறும் இரவு 7.00 மணிக்கு மாயவன் கோவிலில் சென்று சீட்டு பணத்தை கட்டுவேன். நான் சீட்டு பணத்தை கொடுக்கும்போது எதிரிகள் வாங்கிக்கொண்டு வரவு வைத்துக்கொள்வார்கள். இரண்டு வாரமாக சீட்டு பணத்தை கட்ட சென்றபோது அங்கு ஆள் இல்லை. உடம்பு சரியில்லை என்று கூறினார்கள். மறுவாரம் நான் சென்றபோது அங்கு ஆள் இல்லை ஓடிவிட்டார்கள் என்று ஊரில் உள்ளவர்கள் என்னிடம் கூறினார்கள். பின்னர் 8, 9 மாதங்கள் கழித்து எதிரிகள் வந்தார்கள். மாயவன் கோவிலில் வைத்து எல்லோரும் சேர்ந்து கேட்டோம் அதற்கு எதிரிகள் உங்களை எல்லாம் தெரியாது என்று கூறிவிட்டார்கள். நான் பிழைப்பிற்காகவும், சிறு, சிறு குழந்தைகள் இருப்பதால் சேமிப்பிற்காகவும் எதிரிகளிடம் சீட்டு போட்டிருந்தேன். தற்போது வரை நான் கட்டியிருந்த பணம் எனக்கு கிடைக்கவில்லை. கிருஷ்ணன் என்பவர் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க புகார்மனு கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எதிரியை எவ்வாறு பழக்கம் என்றால் நான் செங்கல்மாலில் வேலை பார்த்தேன். பக்கத்தில் அவர்களது தோட்டம் உள்ளது. செங்கல்மாலில் வேலை இல்லாதபோது அவரது தோட்டத்திற்கு வேலைக்கு செல்வேன். வாத்தியார் பெயர் மாயவன், இன்னொருவர் பெயர் ராஜ். 7 குழுக்களாக சீட்டு நடத்தியதாக சொல்லியுள்ளது எவ்வளவு ரூபாய் சீட்டுக்கள் நடத்தினார் என்றால் 61,000/—ம் 60,000/—ம் 53,000/—ம், 50,000/—ம், 30,000/—ம் ரூபாயை இரண்டு பிரிவுகளாக நடத்தினார். நான் சீட்டு போட்டிருந்த 61,000/—ம் சீட்டில் எத்தனை நபர்கள் என்றால் தெரியாது. நான் ஏலம் நடத்தியபோது ஏலத்தில் கலந்து கொண்டேனா என்றால் இல்லை. 61,000/—ம் சீட்டில் யாரெல்லாம் ஏலம் எடுத்தார்கள் என்ற விபரமும் எனக்கு தெரியாது. எத்தனை சீட்டுகள் இதுவரை ஏலம் போயிருக்கிறது என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் 23 சீட்டு. நான் எவ்வளவு பணம் கட்டியிருக்கிறேன் என்று எழுதி வைத்துள்ளேனா என்றால் எழுதி வைக்கவில்லை. ஏலக்கழிவு ஒவ்வொரு முறையும் ஏலத்திற்கு ஏற்ப மாறுபடும் என்றால் சரிதான். 4வது ஏலக்கழிவில் நான் எவ்வளவு பணம் செலுத்தினேன் என்று என்னால் இப்போது சொல்ல முடியாது என்றால் சரிதான். 23 சீட்டுகளில் ஒவ்வொரு மாதமும் எவ்வளவு செலுத்தினேன் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். இந்த விபரங்களை எனக்கு யார் சொல்லிக் கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியும். நான் புகாரை படிக்கவில்லை. புகாரில் யாரெல்லாம் கையெழுத்து போட்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் புகாரில் கையெழுத்து எதுவும் போடவில்லை. புகாரில் என்னுடன் யாரும் கையெழுத்து போட்டார்களா என்று எனக்கு தெரியாது. என்னை போலீசார் புகார் கொடுத்த அன்றைக்கு தான் விசாரித்தார்கள். அதன் பின் விசாரிக்கவில்லை. மாயன் கோவில் கிழக்கு திசையை நோக்கி இருக்கிறது. அந்த கோயிலில் எத்தனை ஆண்டுகளாக வரிதாரர்களால் சீட்டு பணம் நடத்தப்படுகிறது என்று எனக்கு தெரியாது. கிருஷ்ணனை எனக்கு 10 வருடமாக தெரியும். கிருஷ்ணனின் அப்பா பெயர் எனக்கு தெரியாது. புகார் கொடுக்கப்பட்ட விபரம் யார் சொல்லி தெரியும் என்றால் கிருஷ்ணன் சொல்லி தான் எனக்கு தெரியும். கோவிலில் நிர்வாகம் செய்வது சம்மந்தமாக எதிரிகளுக்கும், இன்னொரு தரப்பிற்கும்

பிரச்சனை உள்ளது என்றால் தெரியாது. ஏலத்தில் நான் கலந்து கொள்ளாததால் எவ்வளவு தொகை கழிவு போனது, எவ்வளது தொகை செலுத்தவேண்டும் என்று யார் என்னிடம் சொன்னார்கள் என்றால் மாயவன் சொல்லி தெரியும். நான் சொல்வதுபோல் நான் எவ்வித சீட்டு பணமும் எதிரியிடம் செலுத்தியிருப்பது கிடையாது என்றாலும், நான் செலுத்தும் சீட்டு பணத்தை எதிரி வரவு வைத்துக்கொள்வார் என்றும், கிருஷ்ணன் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி எந்த பள்ளியில் ஆசிரியராக இருக்கிறார் என்றால் தெரியாது. 1ம் எதிரி வாத்தியார் என்ற விபரம் எனக்கு தெரியும். நான் சொல்வதுபோல் எதிரியை அவரது தோட்டத்திற்கு வேலைக்கு செல்லும்போது எனக்கு தெரியும் என்றும், அந்த பழக்கத்தின் அடிப்படையில் சீட்டு போட்டேன் என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு எந்தவித தோட்டமும் கிடையாது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் காவல்நிலையம் எந்த தேதியில் சென்றேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. எத்தனை மணிக்கு என்றால் காலை 10.00 மணிக்கு. ரூ.61,000/-ம் சீட்டிற்கு வாரம் ரூ.2500/- செலுத்த வேண்டும். 61,000/-ம் சீட்டில் மொத்தம் எத்தனை வாரம் செலுத்தவேண்டும் என்றால் 121 வாரம். நான் 23 வாரம் செலுத்தியுள்ளேன். 5 சீட்டும் ஒரே வாரத்தில் தான் செலுத்தினேன் என்றால் சரிதான். 5 சீட்டுக்கும் ஏலக்கழிவு உண்டு என்றால் சரிதான். ஏலக் கழிவு தொகையை உடனடியாக கையில் கொடுத்துவிடுவார்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு சீட்டிலும் 2வது சீட்டு மாயவன் கோவிலுக்கு என்றால் சரிதான். மாயவன் கோவிலுக்கு சீட்டு நடத்தியதால் கோவிலுக்கு எடுத்துக்கொள்வார்கள் என்றால் சரிதான். போலீசார் விசாரிக்கும்போது 36,000/ம் சில்லறை தரவேண்டும் என எதை வைத்து சொன்னேன் என்றால் ஏல கழிவு வருவதை ஒரு பேப்பரில் எழுதி வைத்துள்ளதை வைத்து சொன்னேன். அந்த பேப்பரை போலீசாரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். முதல்விசாரணையில் சொன்னதைத்தான் போலீஸ் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். என்னை விசாரித்த போலீசார் ஆண் போலீசா, பெண் போலீசா என்றால் ஞாபகம் இல்லை. 15 நிமிடம் விசாரித்திருப்பார்கள். காவல்நிலையத்திற்கு சுமார் 40, 50 பேர் சென்றிருப்போம். அதனால் தனித்தனியாக விசாரிக்காமல் மொத்தமாக விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. 3 போலீசார் நின்று தனித்தனியாக விசாரித்தார்கள். எனக்கு வார சம்பளம் ரூ.4,000/-ம். 23 வாரமும் சீட்டை எடுத்தவர்கள் திரும்ப கட்டவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் முதல்விசாரணையில் சொன்னமாதிரி எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், எதிரியோ அவருக்கு வேண்டப்பட்டவர் யாரோ தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தப்படவில்லை என்றாலும் சரியல்ல. (1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது).

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi